# தமிழ் விக்கி ஊடகப் போட்டி

விக்கிப்பீடியாவில் மற்றும் அதன் சகோதரத் திட்டங்களில் கட்டுரைகளுடன் இணைக்கப்படும் ஊடகக் கோப்புகள் (நிழற்படம், வரைபடம், காணொளி, ஒலி வடிவங்கள்) பெரும்பாலும் விக்கிமீடியாவின் ஒரு திட்டமான பொது ஊடகக் காப்பகத்தில் (விக்கி காமன்சு) சேமிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு விக்கித் திட்டத்திலும் இவற்றை இலகுவில் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. விக்கிமீடியாத் திட்டத்தில் இல்லாது சொந்தத் தேவைகளுக்காக விக்கிமீடியா மென்பொருளைப் பயன்படுத்துபவர் கூட இலகுவில் இக்கோப்புகளைக் கட்டுரையில் இடமுடியும்.

தமிழ் விக்கி ஊடகப் போட்டி தமிழ், தமிழர் பற்றிய உயர்தர ஊடகக் கோப்புகளின் எண்ணிக்கையைக் கூட்டுதலையும், கட்டுரை/எழுத்துப் பணியன்றி பிற வழிகளில் விக்கிக்கு பங்களிக்கக்கூடிய புகைப்படக் கலைஞர்கள், ஓவியர்கள், அசைப்பட ஆர்வலர்கள், நிலப்பட ஆர்வலர்கள் போன்றோரை தமிழ் விக்கித் திட்டங்களுக்கு அழைத்து வருதலையும் மேலும் விக்கிமீடியா அறக்கட்டளையுடன் இணைந்து செயல்பட ஒரு முன்மாதிரியை உருவாக்குதலையும் மையமாக வைத்து நடாத்தப்படுகின்றது.

## போட்டி விதிகள்

1) பதிவேற்றப்படும் கோப்புகள் பதிவேற்றுபவரது சொந்த ஆக்கங்களாக இருக்க வேண்டும். பதிப்புரிமை மீறப்பட்டவை exif + tineye தொழில்நுட்பம் கொண்டு இனங்காணப்பட்டு நீக்கப்படும்.
2) ஒருவர் எவ்வளவு கோப்புகளை வேண்டுமேனாலும் பதிவேற்றலாம். கோப்புகளின் எண்ணிக்கைக்கு உச்சவரம்பு கிடையாது
3) பரிசுக்குத் தகுதியுடைய ஆக்கங்கள்: தமிழ்-தமிழர் தொடர்புடைய கட்டுரைகளில் பயன்படுத்தத் தக்கவை;

- தமிழர் வாழிடங்களின் படங்கள், தமிழர், தமிழியல் தொடர்புடையோர் படங்கள்
- தமிழர் மரபுச் சின்னங்கள், தமிழ் நிறுவனங்கள், தமிழர் நிலச்சூழல் உயிரினங்கள் போன்றவற்றின் படங்கள்

- தமிழர் பாரம்பரிய களங்கள், கோவில்கள், வழிபாட்டுத் தலங்கள், கட்டிடங்கள் போன்றவற்றின் படங்கள்
- தமிழில் கல்விவளங்கள்; தமிழ்வழிக் கல்விக்கு பயன்படக்கூடிய ஊடகங்கள் அனைத்தும் - தமிழில் விளக்கம் உள்ள வரைபடங்கள், நிலப்படங்கள், கணித, அறிவியல் படங்கள், அட்டவணைகள், விளக்கப்படங்கள், ஒலிக்கோப்புகள், நிகழ்படக் கோப்புகள்
- தமிழ்ச் சொற்களின் ஒலிப்பு/உச்சரிப்புக் கோப்புகள், தமிழ் இலக்கியப் பாடல்களின் ஒலிக் கோப்புகள்.
- தமிழர் பண்பாட்டு ஊடகப் பதிவுகள் (தமிழ் நாட்டார் பாடல்கள், ஆடல், பாடல் கலைகள், விளையாட்டுகள் போன்றவற்றின் ஒலி/ஒளிக் கோப்புகள்)

4) ஆக்கங்கள் மட்டுமே தமிழ்-தமிழர் தொடர்புடையதாக இருக்க வேண்டுமென்பது விதி. ஆக்குனர் தமிழராக இருக்கத் தேவையில்லை. தமிழரல்லாதோரும் பங்கேற்கலாம்.
5) புகைப்படம், (jpg, png, svg, xcf, TIFF) நிகழ்படம் (.ogg theora), அசைப்படம் (gif), ஒலிக்கோப்புகள்(.ogg vorbis, .midi),
6) கோப்புகள் நேரடியாக காமன்சில் பதிவெற்றப்பட வேண்டும். போட்டி வார்ப்புரு இணைக்க வேண்டும்.
7) ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் பங்கேற்கலாம், ஆனால் அவர்களது ஆக்கங்கள் பரிசுகளுக்கு தகுதியுடவையாகக் கருதப்படா. (ஒப்புச்சப்பாணியாகப் பங்குகொள்ளலாம்)
8) தேர்வு வரையறை எடை - 50 % ஆக்கத்தின் நயம் (ரெசலூசன், தெளிவு, அழகு), 50 % பயன்பாடு (தமிழ் விக்கித் திட்டங்களுக்குப் பயனுள்ளவையா, தற்போதுள்ள தமிழ் விக்கிக் கட்டுரைகளுக்கு பயன்படும் படங்கள்)
9) பரிசுகள்:

- முதல் பரிசு: 200 US$
- இரண்டாம் பரிசு : 100 US$
- மூன்றாம் பரிசு : 50 US$
- ஆறுதல் பரிசுகள்: 25 X 2 = 50 US$
- தொடர் பங்காளிப்பாளர் பரிசுகள் : 100 X 3 = 300 US$
- சான்றிதழ், பங்களித்த ஆக்கங்கள் விக்கித் திட்டங்களின் முதற்பக்கங்களில் காட்சிபடுத்தப்படும்.

10)நடுவர்கள் - ஒருங்கிணைப்பாளர்களே. வெளிப்படையான மதிப்பீடு (விக்கியிலேயே)